# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

02.11.2022

**Wesite Link** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**Faceook Link** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## முக்கிய தினங்கள்

1. 02-11-22
   - இன்று அலோபதி மருத்துவராக இருந்து ஹோமியோபதி மருத்துவ சிறப்பை உணர்ந்து ஹோமியோபதி மருத்துவராக மாறியவரும் ,சமூக ஆர்வலருமான **மகேந்திரலால் சர்க்கார்** (1833) பிறந்த தினம்.

## மத்திய செய்திகள்

1. சுதந்திரப் போராட்டத்தில் பழங்குடியினரின் மாபெரும் பங்களிப்பு
   - சுதந்திரப் போராட்டத்தின் போது பழங்குடியினர் பங்களிப்பு மாபெரும் வரலாறாகும். அந்த வரலாற்றை சரித்திரத்தில் இடம்பெறச் செய்துள்ளோம் என்று பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.
   - சுதந்திரப் போராட்டத்தின்போது ஆங்கிலேயர்களை எதிர்த்து நடைபெற்ற ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு முன்னதாகவே திகழ்ந்த மிகப் பெரிய படுகொலை மான்கர் தாம் வனப்பகுதியில் நிகழ்ந்த படுகொலையாகும்.
   - 1913ஆம் ஆண்டு நவம்பர் 17-இல் ராஜஸ்தான் மாநிலம் பன்ஸ்வாரா மாவட்டத்தில் **கோவிந்த் குரு தலைமையில்** ஆங்கிலேயர்களை எதிர்த்து ஆயிரக்கணக்கானோர் மான்கர் மலையை நோக்கிப்பேரணி சென்றனர்.
   - அப்போது அந்தக் கூட்டத்தை நோக்கி ஆங்கிலேய வீரர்கள் கண்மூடித்தனமாகத் துப்பாக்கியால் சுட்டதில் பெண்கள், குழந்தைகள் உள்பட1,500-க்கும் மேற்பட்டோர் பலியாகினர். வரலாற்றில் இச்சம்பவம் **மான்கர்தாம் படுகொலை** எனக் குறிப்பிடப்படுகிறது.
   - இப்போராட்டத்தின் போது உயிரிழந்த மக்களின் **நினைவிடம் ராஜஸ்தான் மாநிலம், பன்ஸ்வாரா மாவட்டம், மான்கரில்** உள்ளது.
   - 1857-ஆம் ஆண்டு நிகழ்ந்த முதல் இந்திய சுதந்திரப் போருக்கு முன்னதாகவே தீவிர சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பழங்குடியின மக்கள். சந்தால் பழங்குடியின மக்கள் 1780-லேயே பிரிட்டிஷாருக்கு எதிராகப்போராடியுள்ளனர்.

✍ **1913ஆம் ஆண்டு நவம்பர் 17:- மான்கர்தாம் படுகொலை**

## பொருளாதாரம்

1. அக்டோபர் ஜிஎஸ்டி வசூல் ரூ.1.52 லட்சம் கோடி - 2 வது அதிகபட்ச தொகை
   - அக்டோபரில் சரக்கு மற்றும் சேவை வரியாக (ஜிஎஸ்டி) **ரூ.1.52 லட்சம் கோடி** வசூலாகியுள்ளது.

- அக்டோபர் மாத ஜிஎஸ்டி வசூல், கடந்த ஏப்ரல் மாதத்துக்கு அடுத்தபடியாக வசூலான இரண்டாவது அதிகபட்ச தொகையாகும்.
- கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் ரூ.1.30 லட்சம் கோடி ஜிஎஸ்டி வசூலாகியிருந்த நிலையில், இந்த ஆண்டு 16.6 சதவீதம் அதிக வரி வசூல் பதிவாகியுள்ளது.
- கடந்த ஏப்ரலில் ஜிஎஸ்டி வருவாய் சாதனை அளவாக **ரூ.1.68 லட்சம் கோடியாக** இருந்தது. கடந்த செப்டம்பரில் **ரூ.1.48 லட்சம் கோடி** வசூலாகியிருந்தது
- மாநிலங்களைப் பொருத்தவரை, ரூ.23,037 கோடி ஜிஎஸ்டி வருவாயை ஈட்டி, அக்டோபரில் அதிக வருவாய் ஈட்டிய மாநிலங்களின் பட்டியலில் **மகாராஷ்டிரம் முதல் இடத்தில்** உள்ளது.

**தமிழக ஜிஎஸ்டி வருவாய்:-**

- தமிழகத்தின் ஜிஎஸ்டி வருவாய் **ரூ.9,540 கோடியாகவும்**, புதுச்சேரியின் ஜிஎஸ்டி வருவாய் ரூ.204 கோடியாகவும் உள்ளது

## நோய்கள்

### 1. மையோசைட்டிஸ்

- மையோசைட்டிஸ் என்பது ஒரு வகையான **தசை அழற்சி நோய்**. உடலின் நோய் எதிர்ப்பாற்றலே தசை செல்களுக்கு எதிராகச் செயல்பட்டு அதைச் சிதைப்பதற்கு மையோசைட்டிஸ் எனப் பெயர்.
- இந்த தசை அழற்சி நோயானது ஆண், பெண் இரு பாலருக்கும் வரக் கூடியது. அதிலும், குறிப்பாக பெண்களுக்கு வருவதற்கு சற்று கூடுதலான வாய்ப்பு உள்ளது. மருத்துவத் துறையில் **இடியோபதிக் இன்ஃப்ளமேட்டரி மையோசைட்டிஸ் (ஐஐஎம்)** என அதை அழைக்கின்றனர்.
- **தசை அழற்சி நோயின் வகைகள்:-**
  - தோல் பாதிப்புடன் கூடிய தசை அழற்சி நோய் **(டெர்மடோ மையோசைட்டிஸ்).**
  - தோல் பாதிப்பற்ற தசை அழற்சி நோய் **(பாலி மையோசைட்டிஸ்).**
- **காரணம்:-**
  - மையோசைட்டிஸ் நோய் வருவதற்கான காரணத்தை இன்னமும் மருத்துவ உலகத்தால் உறுதியாகக் கண்டறிய முடியவில்லை.
  - ஒரு வகையான வைரஸ் தொற்றால் இது ஏற்படலாம் என்றாலும் அதனை உறுதி செய்ய இயலவில்லை.
  - உலகம் முழுவதும் இந்நோய் பரவலாக உள்ளது. குறிப்பாக, **குளிர் மற்றும் மழை காலங்களில் பாதிப்பு அதிகம் இருக்கும்.**
- **பாதிப்பு:-**

- உடலில் பழைய தசைநார் திசுக்கள் இறந்து புது திசுக்கள் உருவாவது இயற்கை. அவ்வாறு இயற்கையாக அல்லாமல் மையோசைட்டிஸ் பாதிக்கப்பட்டவர்களுக்கு நோய் எதிர்ப்பாற்றல் எதிர்வினையால் தசை அழற்சி ஏற்பட்டு செல்கள் சிதைவுக்குள்ளாகும்.
- இதை கவனிக்காவிட்டால் இயல்பு வாழ்க்கையை முடக்கிவிடும். தசை செல்கள் நிரந்தரமாக அழியக்கூடிய வாய்ப்பும் உள்ளது.
- பொதுவாக உணவு உண்ணும்போது உணவுக் குழாய் திறந்துகொண்டு, சுவாசக் குழாய் மூடிக் கொள்ள வேண்டும்.
- மையோசைட்டிஸ் பாதிப்பால் தசை பலவீனமாக இருக்கும்போது உண்ணும் உணவானது சுவாசக் குழாய்க்குச் செல்லும் வாய்ப்பு ஏற்படும்.
- அவ்வாறு ஏற்பட்டால் ஆஸ்பிரேசன் நிமோனியா ஏற்படக் கூடும். அது ஒருகட்டத்தில் உயிரிழப்பை ஏற்படுத்தலாம். இதைத் தவிர, டெர்மோ மையோசைட்டிஸ் பாதிப்புக்குள்ளாவோருக்கு அரிதாக புற்றுநோய் பாதிப்பு ஏற்படக்கூடும்.

❖ **அறிகுறிகள்:-.**

- காய்ச்சல்; உடல் சோர்வு; பசியின்மை; தசைகளில் வீக்கம்; படுக்கையிலிருந்து எழுவதில், உட்கார்ந்து எழுவதில், நடப்பதில் சிரமம்;உணவு விழுங்குதலில், தண்ணீர் அருந்துதலில் சிரமம்.
- இருமல்; மூச்சுத் திணறல்; பேசுவதில் சிரமம்; குரல் மாற்றம்; தோலில் சிவந்த தடிப்பு;மார்பகத்தில் சிவந்த தடிப்புகள்; தசைகளில் வலி;

❖ **பாதிப்பு விகிதம்:-**

- 1 லட்சத்தில் 22 பேருக்கு வரலாம்

## <u>நியமனம்</u>

### 1. ட்விட்டர் தொழில்நுட்ப ஆலோசகராக ஸ்ரீராம் கிருஷ்ணன்

❖ ட்விட்டர் நிறுவனத்தை வாங்கியுள்ள டெஸ்லா நிறுவனர் எலான் மஸ்க், நிறுவனத்தின் தலைமைப் பொறுப்புக்குப் புதிய நிர்வாகிகளை நியமித்து வரும் நிலையில், அவரது தொழில்நுட்ப ஆலோசகராக **சென்னையைச் சேர்ந்த ஸ்ரீராம் கிருஷ்ணன்** செயல்பட்டு வருகிறார்.

❖ ட்விட்டர் நிறுவனத்தை எலான் மஸ்க் கடந்த வாரம் வாங்கினார். முதல் நாளிலேயே, அந்நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியாக இருந்த இந்தியரான **பராக் அக்ரவால்** உள்ளிட்ட ஐவரை அவர் பணியில் இருந்து நீக்கினார்.

✍ **டெஸ்லா நிறுவனர்:- எலான் மஸ்க்**

## விருது

### 1. புனித் ராஜ்குமாருக்கு - கர்நாடக ரத்னா விருது

- மறைந்த கன்னட **நடிகர் புனித் ராஜ்குமாருக்கு** கர்நாடக அரசின் 'கர்நாடக ரத்னா' விருது வழங்கப்பட்டது. இவ்விருதை அவரது மனைவி அஸ்வினியிடம் முதல்வர் பசவராஜ் பொம்மை வழங்கினார்
- கன்னட நடிகர் ராஜ்குமாரின் மகனும், நடிகருமான புனித் ராஜ்குமார், கடந்த ஆண்டு அக். 29ஆம் தேதி தனது 46ஆவது வயதில் மாரடைப்பால் காலமானார்.
- **கர்நாடக உதய தின விழாவில்** கர்நாடக அரசின் உயர்ந்த 'கர்நாடக ரத்னா' விருது நடிகர் புனித் ராஜ்குமாருக்கு வழங்கப்பட்டது. புனித் ராஜ்குமாரின் மனைவி அஸ்வினியிடம் விருதை முதல்வர் பசவராஜ் பொம்மை வழங்கினார்.

**கர்நாடக ரத்னா விருது**

- கடந்த **2009 ஆம் ஆண்டு வீரேந்திர ஹெக்டேக்கு** கர்நாடக ரத்னா விருது வழங்கப்பட்டது. **1992ஆம் ஆண்டு முதல்** வழங்கப்படும் **இந்த விருதை பெறும் 9ஆவது நபர் புனித் ராஜ்குமார்.**
- இதுவரை முன்னாள் முதல்வர் எஸ்.நிஜலிங்கப்பா, சி.என்.ஆர்.ராவ், பீம்சென் ஜோஷி, சிவகுமார சுவாமிகள், ஜே.ஜவரே கௌடா ஆகியோருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

✍ **கர்நாடக முதல்வர்**:- **பசவராஜ் பொம்மை**

## மறைவு

### 1. சுதந்திர போராட்ட தியாகி விஸ்வநாத் தாஸ் மறைவு

- ஒடிஸாவை சேர்ந்த சுதந்திர போராட்ட **தியாகி விஸ்வநாத் தாஸ்** காலமானார்.அவருக்கு வயது 106.
- ஒடிஸாவின் ஜகத்சிங்பூர் மாவட்டத்தில் உள்ள பாலிகுடா பகுதியை சேர்ந்த அவர், மகாத்மா காந்தியின் அழைப்பை ஏற்று சுதந்திர போராட்டத்தில் பங்கேற்றார்.
- அவர் '**பாலிகுடா காந்தி**' என்றும் அழைக்கப்படுவார்.கடந்த 2012-ஆம் ஆண்டு முன்னாள் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியால் கௌரவிக்கப்பட்ட அவர், கடந்த 2020-இல் 'வெள்ளையனே வெளியேறு' இயக்க போராட்ட தினத்தையொட்டி குடியரசுத் தலைவர் விருது பெற்றார்.

✍ **ஒடிஸா முதல்வர்** :- **நவீன் பட்நாயக்**